सामान्य प्रशासन कार्यालय
GENERAL ADMINISTRATION OFFICE
27 JAN 2023
चेन्नै पत्तन प्राधिकरण
CHENNAI PORT AUTHORITY

PORT OF CHENNAI

SECRETARY'S OFFICE
No.
Dt. 27/01/23
CH. P.A

AM (PR)

Secy

# CHENNAI PORT AUTHORITY

## I & PR DIVISION

**Name of the news papers:** MAKKAL KURAL **Date:** 24.01.23

**Page No.:** 07

**Col. :** 03

# சென்னை துறைமுகப் பணிகள்;மத்திய அமைச்சரவை சிறப்பு அதிகாரி ஆய்வு: சேர்மன் சுனில் பாலிவாலுக்கு பாராட்டு

சென்னை, ஜன.24–

சென்னை துறைமுகத்தில் கண்டெய்னர் லாரிகள் நிறுத்தும் வளாகம் நிறுவுவதற்கு மத்திய துறைமுக அமைச்சரக சிறப்பு அதிகாரி சுதன்ஸ்பந்த் அடிக்கல் நாட்டினார். இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ.52.85 கோடி ஆகும். இது 24பி பெர்த் பகுதியில் நிறுவப்பட உள்ளது.

சென்னை துறைமுகத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்த சென்னை துறைமுக அமைச்சகத்தின் சிறப்பு பிரதிநிதி சுதன்ஸ் பந்த் சென்னை துறைமுக நிர்வாகத்தின் செயல்பாடுகளையும்சேர்மன் சுனில் பாலிவாலையும் பாராட்டினார்.

இது தவிர ரூ.1.57 கோடியில் நவீன தொழில்நுட்பத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை நாளொன்றுக்கு 90 கிலோ லிட்டர் திறனுடன் சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்படுகிறது. இதற்கான தொழில் நுட்பத்தை பிவிஏ ஜெல் மீடியா வழங்கி உள்ளது என்று இவரை வரவேற்ற சென்னை துறைமுக தலைவர் சுனில் பாலிவால் தெரிவித்தார்.



இதற்கு வருகை தந்த மத்திய துறைமுக அமைச்சகத்தின் சிறப்பு அதிகாரி சுதன்ஸ் பந்த்தை சென்னை துறைமுக தலைவர் சுனில் பாலிவால் வரவேற்றார். சென்னை துறைமுகத்தின் துணைத் தலைவர் எஸ். பாலாஜி அருண்குமார் உடன் இருந்தார்.

இந்த சென்னை துறைமுக பணிகளை பார்வையிட்ட சுதன்ஸ் பந்த் 20 மீட்டர் உயரமான கொடி மரத்தில் தேசியக் கொடியை ஏற்றி பல்வேறு நடவடிக்கைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். மத்திய துறைமுக அமைச்சகத்தின் சிறப்பு அதிகாரி சுதன்ஸ் பந்த் சென்னை துறைமுகத்தில் முக்கிய இடங்களில் மரம் நட்டார்.

இவர் பங்கர் கப்பல் தளம், உபரி பார்க்கிங் பகுதி, பயணி கப்பல் இறங்கு தளம் போன்றவற்றை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். ஜேடி 3 என்னும் அரங்கத்தை புதுப்பிப்பது பற்றி பார்வையிட்டார்.